**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-09022024-8142

Volume: 9

Issue: 2

Month: Octobar

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 06.08.2024

Accepted: 20.09.2024

Published: 01.10.2024

Citation:
Sankara Narayanan, K. "Poetry Alteration in Nachinarkiniyar's Kalithogai Commentaries Text." *Shanlax International Journal of Tamil Research*, vol. 9, no. 2, 2024, pp. 13–18

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i2.8142

*Corresponding Author:
krksankaraatamil@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Poetry Alteration in Nachinarkiniyar's Kalithogai Commentaries Text

**K. Sankara Narayanan**
*Assistant Professor& Head (i/c),*
*Sangappalagai for Tamil Development*
*University of Madras, Chennai, Tamil Nadu, India*
*http://orcid.org/0000-0002-6260-8164*

**Abstract**
*Commentator do not merely interpret the text. In his explanation he will provide all the information related to the explanation for poet. The authors of the text study all the texts of the period and their previous period and write the text for their text through it. On the whole, the text can be called an encyclopaedia. The poets who composed songs used to mutilate some words based on prosody in their verses. Only then is the song complete in terms of yap. Poetry alteration was a strategy used by Sangam poets for this purpose. Nachinarkiniyar was the author of Commentaries text for the Sangam literature book Kalithogai. This article highlights the notes related to the Poetry alteration found in Nachinarkiniyar's Commentaries text.*

***Keywords:*** *Kalithogai, Nachinarkiniyar, Poetry, Alteration, Sangam Literature, Word, Grammar, Commentary, Commentator, Prosody*

**References**

1. Aravinthan.Mu.Vai. 2008,Urai aashiriyargal, Chennai, Manivasagar Publications.
2. Elampooranar Urai. 2010,Tholkappiya Porulathikaaram Moolamum Uraium, Chennai, Saratha Publication
3. Kalithogai Moolamum Nachinarkiniyar Vuraiyum, 2022, Dr.Vu.Ve. Saminathaiyyar Library Publication, Chennai
4. Sangam Literature, Ettuthogai - Vol I, 2014, Chennai New Century Book House
5. Sangam Literature, Ettuthogai - Vol II, 2014, Chennai New Century Book House
6. Sangam Literature, Ettuthogai - Vol III, 2014, Chennai New Century Book House
7. Sangam Literature Patthupattu - Vol I, 2014, Chennai New Century Book House
8. Sangam Literature Patthupattu - Vol II, 2014, Chennai New Century Book House
9. Subramaniam. Sa.Ve.Su., Sangam Literature, 2006, Chennai, Manivaasagar Publication
10. Sirpi Balasubramaniyan & Neelapathmanaban, Puthiya Nokki Tamil Ilakkiya Varalaru, New Delhi, Sakthiya Academy
11. Tamillannal, Tholkappiyam Ezhuthathikaaram, Vol – I, 2006, Chennai, Manivasagar Publications
12. Tamillannal, Tholkappiyam Cholathikaaram, Vol – II, 2006, Chennai, Manivasagar Publications
13. Tamillannal, Tholkappiyam Porullathikaaram, Vol – III, 2006, Chennai, Manivasagar Publications

# நச்சினார்க்கினியரின் கலித்தொகை உரையில் செய்யுள் விகாரம்

***முனைவர் கி. சங்கர நாராயணன்***
உதவிப் பேராசிரியர், துறைத்தலைவர் (பொ.)
தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகை
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை

***ஆய்வுச்சுருக்கம்***
*உரையாசிரியர்கள் செய்யுளுக்கு விளக்கம் தரும் பணியினை மட்டும் செய்யவில்லை; உரையில் செய்யுளுக்கான விளக்கத்துடன் தொடர்பான அனைத்துச் செய்திகளை வழங்குவர். உரையாசிரியர்கள் காலம், அவர்களுடைய முன்னைக் காலம் ஆகிய காலங்களிலுள்ள நூல்களை தெளிவுறக் கற்று அதன் வழியாக உரையினை எழுதுவர். மொத்ததில் உரையினை கலைக்களஞ்சியம் எனலாம். பாடல்களை இயற்றும் புலவர்கள் பாக்களில் யாப்பு அடிப்படையில் சில சொற்களை விகாரப்படுத்துவது உண்டு. அவ்வாறு செய்தால்தான் அந்த பாடலானது யாப்பின் அடிப்படையில் நிறைவு பெற்றதாகும். இதற்காகச் சங்கப் புலவர்கள் கையாண்ட ஒரு உத்திதான் செய்யுள் விகாரம். சங்க இலக்கிய நூலான கலித்தொகைக்குக் உரை கண்ட நச்சினார்க்கினியரின் கலித்தொகை உரையில் காணலாகும் செய்யுள் விகாரம் தொடர்பான பதிவுகளை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.*
***முக்கியச்சொற்கள்:*** *கலித்தொகை, நச்சினார்க்கினியர், செய்யுள், விகாரம், சங்கஇலக்கியம், சொல், இலக்கணம், உரை, உரைமரபு*

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகிய நான்குவகைச் சொற்களையும் செய்யுளுள் ஆளுமிடத்து மெல்லொற்றை வல்லொற்றாக்க வேண்டிய வழி வல்லொற்றாக மாற்றுவதும் வல்லொற்றை மெல்லொற்றாக்க வேண்டிய வழி மெல்லொற்றாக மாற்றுவதும் ஒரு சொல்லின்கண் ஒன்றிரண்டு எழுத்து விரிக்கவேண்டிய வழி விரித்தலும் ஒரு சொல்லில் ஒன்றிரண்டெழுத்துத் தொகுக்க வேண்டிய வழித் தொகுத்தலும் குற்றெழுத்தை நீட்ட வேண்டிய வழி நீட்டலும் நெட்டெழுத்தைக் குறுக்கவேண்டிய வழிக் குறுக்கலும் ஆகிய ஆறுவகை விகாரங்களையும் செய்யுளில் ஓசை இன்பத்துக்காகப் புலவர்கள் பயன்படுத்துவர். இதுவே செய்யுள் விகாரம் எனப்படும்.

**அந்நாற் சொல்லும் தொடுக்குங் காலை**
**வலிக்கும்வழி வலித்தலும் மெலிக்கும்வழி மெலித்தலும்**
**விரிக்கும்வழி விரித்தலும் தொகுக்கும்வழித் தொகுத்தலும்**
**நீட்டும்வழி நீட்டலும் குறுக்கும்வழிக் குறுக்கலும்**
**நாட்டல் வலிய என்மனார் புலவர்**
***(தொல்.சொல்.எச்சவியல்.886)***

**சான்று - முத்தை வரூஉம் காலம்**
**குன்றியலுகரத்து இறுதியாகும்**
**தண்ணந்த துறைவன்**

இத்தொடரிலுள்ள முந்தை என்பது முத்தை என்றாயிற்று. குற்றியலுகரம் என்பது குன்றியலுகரமாயிற்று. தண் என்பது தண்ணம் என ஆனது விரித்தல் விகாரமாயிற்று. இனிக் கலித்தொகைக்கு உரைகண்ட நச்சினார்க்கினியர் உரைகளில் காணலாகும் விகாரங்களின் வருகை முறைகள் பின்வருமாறு,

**"கண்ணொடு தொடுத்தென நோக்கியு**
**மமையாரென்"** ***(நச்சர்.கலி.4:18)***

தொடுத்தது தொடுத்தென விகாரமாயிற்று. அணிகலன்களை என் உடம்பில் அழகுபடுத்திப் பார்க்கிறார். என்ன நினைக்கிறாரோ தெரியவில்லையோ? என் உடம்பில் இருக்கும் மாமைச் சுணங்கை (மாநிற வரிகளை) வைத்த கண் எடுக்காமல் பார்த்துக் கொண்டே இருந்தும் நிறைவடையவில்லையே, ஏன் என்கிறாள்.

**"நாளுங்கோண்மீன் தகைத்தலுந் தகைமே"**

***(நச்சர்.கலி.5:9)***

தகைம் என்றது ஈற்றுமிசை யுகரம் மெய்யொடுங்கெட்டு நின்றது.

**"கொடுங்கொட்டி யாடுங்காற் கோடுய ரகல்குறி"**

***(நச்சர்.கலி.6)***

கொடுங்கொட்டி, கொடுகொட்டி என விகாரமாயிற்று.

**"கைபுனை வல்வின் ஞாணுளர் தீயே"**

***(நச்சர்.கலி.7:6)***

உளர்தியென்னும் முன்னிலை வினை விகாரத்தில் நீண்டது.

**"பண்டரங்க மாடுங்காற் பணையெழி லணை மென்றோள்"** ***(நச்சர்.கலி.9)***

பாண்டரங்கம் பண்டரங்கமென விகாரமாயிற்று.

**"முறைநாள் கழித லுறா அமைக் காண்டை"**

***(நச்சர்.கலி.12:14)***

"காண்" என்னும் முன்னிலை வினை "காண்டை" யெனத் திரிந்தது. அது சரியில்லை. இளமை நிலைத்திருக்காது. இளமையில் தானே காம இன்பம் துய்க்கமுடியும். இளமையும், காமமும் நீ சொல்கிறபடி யெல்லாம் கேட்டுக்கொண்டு உன்னிடம் நிற்கமாட்டா. இவள் மார்பில் உன் மாலை குழையும்படி தழுவும் முறை-நாட்கள் வீணாகக் கழுந்துபோவதுதான் நிகழும்.

**"திரிமருப் பேறொடு தேரறேர்க்கோட"**

***(நச்சர்.கலி.13:4)***

ஏற்றொடு என்பது ஏறொடு என விகாரமாயிற்று. சுரத்தென்னும் அத்து விகாரத்தாற்றொக்கது.

**"முலையணிந்த முறுவலாள் முற்பாணி தருவாளோ"** ***(நச்சர்.கலி.14)***

முல்லை - முலையென விகாரமாயிற்று.

**"மருளிகொண் மடநோக்க மயக்கப்பட் டயர்ந்தாயோ"** ***(நச்சர்.கலி.14:11)***

மருள், "மருளி" யெனப் பகுதிப்பொருள் விகுதியாய் நின்றது.

**"சினைவாடச் சிறக்குநின் வினந்தணிந் தீகென"**

***(நச்சர்.கலி.16:11)***

தணிந்தீக - வியங்கோட்டிரிசொல் விகாரமாய் நின்றது.

**"தாதுதேரல் பறவையின் அருந்திறல் கொடுக்குங்கால்"** ***(நச்சர்.கலி.22:7)***

ஆர்ந்து - அருந்தென விகாரமாயிற்று.

**"இறந்திரால் ஐயமற் றவணி லைமை"**

***(நச்சர்.கலி.25:7)***

**ஆயில் - ஆலென விகாரமாயிற்று.**

துரியோதனன் கைத்திறனால் கட்டப்பட்ட அந்த மாளிகைக்கு அவனே தீ மூட்டினான். வீமன் பாண்டவர்களைக் காப்பாற்றினான். அது போல மலையில் மூங்கில் காட்டில் தீ பற்றிக்கொண்டபோது ஆண்யானை அந்தத் தீயைக் காலால் மிதித்து, தன் யானைகளைக் காப்பாற்றி அழைத்துச் செல்லும் காடு அது. இத்தகைய கொடிய காட்டைக் கடந்து செல்லும் ஐயனே! இவள் நிலைமையைக் கேட்டருள்க என்கிறது கலித்தொகை.

**"ஏனோன்போ னிறங்கிளர்பு கஞலிய ஞாழலும்"**

***(நச்சர்.கலி.26:4)***

ஏனோன் - ஏனையோனின் விகாரம்.

**"முறை வரைந் தனர் அவர் உவக்கும் நாளே"**

***(நச்சர்.கலி.45:24)***

**உறைதல் "உறை"யென விகாரமாயிற்று.**

தனக்குற்ற துன்பத்தைப் பலவாறு எடுத்துரைத்து, என் தோழி தான் மறைவாகக் கொண்ட நட்பானது அருகி வருவதால், வருந்துவதைப் பார்த்து என் தலைவியின் பெற்றோர், நிலைமையை அறிந்துகொண்டு, அவள் உவக்கும்படி அவளது திருமணத்துக்கு நல்ல நாள் பார்க்கின்றனர். இவ்வாறு தோழி சொல்கிறாள்.

**"பறாஅக் குருகின் உயிர்தலு முயிர்த்தனன்"**

***(நச்சர்.கலி.54:11)***

அக்குருகு - பறவாக்குருகு வெளிப்படை விகாரம்.

**"மன்னர் வுலகத்து மன்னுவது புரைமே"**

**(நச்சர்.கலி.54:20)**

புரையும் ஈற்றுமிசை யுகரம் மெய்யொடுங்கெட்டது.

நம் வீட்டில் என்னை அடைத்துவைத்துக் காக்கக்கூடியஅரிய கட்டுக்காவலை நான் மீறிக்கொண்டு செல்லாமல் இவனோடே மணம் கொள்ளுமாறு நீ செய்தால் நல்லது என்று உன்னோடு கலந்துபேச விரும்புகிறேன். இவ்வகையில் நீ எனக்குத் துணைபுரிந்து இவ்வாறாக இந்த மணத்தை முடித்துவைத்தாள் இவள் என்று நிலையாத இவ்வுலகத்தில் நிலைத்து நிற்கும் உன் புகழ் என்கிறது கலித்தொகை.

**"பொன்னகை தகைவகிர் வகைநெறி வயங்கிட்டு" (நச்சர்.கலி.55:2)**

வயங்க - விகாரமாயிற்று.

**"சொல்லினும் அறியாதாய் நின்தவ றில்லானும்"**

**(நச்சர்.கலி.58:16)**

ஆயினும் ஆனுமெனக் குறைத்து நின்றது. அழியுகவென்றும் பாடம்.

**"பொய்தல மகளையாய் பிறர்மனைப் பாடிநீ"**

**(நச்சர்.கலி.59:16)**

பொய்தல் - அகரம் செய்யுள் விகாரம் ஆகும்.

**"என்செய்தான் கொல்லோ இஃதொத்தன் தன்கண்"**

**(நச்சர்.கலி.60:9)**

ஒத்தனென்பது இடை குறைந்து நின்றது.

**"கடம்பூண் டொருகால் நீ வந்தை யடமபட்டாள்" (நச்சர்.கலி.63:12)**

**"வரீவென்றது "வந்தை" யெனத் திரிந்தது.**

**"தையால் தம்பலந் தின்றியோ"**

**(நச்சர்.கலி.65:13)**

**தம்பலம் - தாம்பூலமெனும் வடமொழித்திரிபு**

**"ஊடியார் நலந்தேம்ப ஒடியெறிந் தவர்வயின்"**

**(நச்சர்.கலி.68:12)**

ஒடிய வெறிந்தென்பது ஒடியெறிந்தென விகாரமாயிற்று.

**"ஒருநீ பிறிரில்லை அவன்பெண்டிர் எனவுரைத்"**

**(நச்சர்.கலி.71:9)**

ஓர் என்னுஞ்சொல் உகரம் பெற்று வந்தது.

**"கண்பொர ஒளிவிட்ட வெள்ளிய வள்ளத்தால்"**

**(நச்சர்.கலி.73:3)**

"வெள்ளிய வள்ளம்" என்பது "மென்மையு மிடைமையும் வரூஉங்காலை, யின்மை வேண்டுமென்மனார் புலவர்" என்பதனால் அம்முச்சாரியையின் மகரங்கெட்டு, அகரம் யகரவுட்படு மெய் பெற்று நின்றது.

**"அச்சா றாக உணரிய வருபவன்"**

**(நச்சர்.கலி.75:20)**

அஞ்சிய சுறுத்தலும் என்றாற்போல அச்சம் "அச்சு" என விகாரமாய் நின்றது.

**"நெடுங்கய மலர்வாங்கி நெறித்துந்தந் தனைத்தற்கோ**
**விடுந்தவர் விரகின்றி எடுத்தசொற் பொய்யாக"**

**(நச்சர்.கலி.76:11, 12)**

தந்த, விடுத்த - விகாரம்.

ஒடுங்கி நாம் புக முடியாத இடத்துக்குச் சென்று குளத்தில் இருக்கும் மலர்களை வளைத்துப் பறித்துத் தந்ததற்காகவாநீ இப்படிக் கேட்கிறாய். ஊரார் உண்மையை விட்டுவிட்டு எண்ணிப் பார்க்காமல் எடுத்துச் சொல்வதைப் பொய் என்று நீ கடிந்துரைக்காமல் நீ அவர்களோடு சேர்ந்து கொண்டு பேசுகிறாயே.

**"தெரிவேய்த்தோள் கரும்பெழுதித் தொய்யில் செய்தனைத்தற்கோ"**

**(நச்சர்.கலி.76:17)**

செய்த - விகாரம். உனக்குத் தொய்யில் எழுதத் தெரியவில்லை என்று அவன் என் கையிலும் தோளிலும் காமனின் கரும்பு-வில் உருவத்தில் தொய்யில் எழுதிவிட்டானே அதற்காகவா நீ இப்படிக் கேட்கிறாய். நம்மைச் சூழ்ந்திருக்கும் ஆயத்தார் சுற்றி வளைத்துப் பொய்யாகப் பேசும் சொல்லை உணராமல் நீ மனம் மயங்கிப் பேசுகிறாய்.

**"உரிதென உணராய்நீ உலமந்தாய் போன்றதை"**

**(நச்சர்.கலி.80:2)**

கயந்தலை - வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றியது.

**"போத ரகடாரப் புல்லி முயங்குவேம்"**

**(நச்சர்.கலி.94:41)**

போதரு - போதரென விகாரமாயிற்று.

**"சேகா, கதிர்விரி வைகலின் கைவாரூஉக் கொண்ட"** ***(நச்சர்.கலி.96:22)***

சேவகா - சேகா எனத் திரிந்து நின்றது. விகாரமெனினுமாம்.

**"யாரைநீ யெம்பில் புகுதர் வா யோரும் புதுவ மலர்தேலும் வண்டேபோல் யாழ்"** ***(நச்சர்.கலி.98:1, 2)***

புகுதருவாயென்பது புகுதர்வாயெனத் திரிந்து நின்றது. உகரம் விகாரத்தாற் றொக்கதெனினுமாம்.

யார் நீ என் வீட்டுக்குள் நுழைகின்றாய்? எண்ணிப்பார். புதுப்புது மலரைத் தேடும் வண்டு போல் நுழைகின்றாய். ஒவ்வொரு நாளும் உனக்குத் திருமணம் போல் நடந்து கொள்கிறாய்.

**"மழைசுரற் தனித்தோம்பு நல்லூழி யாவர்க்கும்"** ***(நச்சர்.கலி.99:5)***

ஊழ் ஊழியெனத் திரிந்தது. அந்தணர் இரு வகைப்படுவர். வேதம் ஓதுபவர் ஒரு வகை. மக்களை வழிப்படுத்துபவர் மற்றொரு வகை. இவர்கள் இருவருமே மக்களுக்கு அறிவுரை வழங்கி நெறிப்படுத்துவர். நூல் நெறி பிழையாமல் வாழ்ந்து காட்டுவர். குழந்தையை வளர்க்கும் தாய்போல், மக்களுக்கு உதவுவர். இவர்களின் நன்னடத்தையால் உலகத்தில் மழை சுரந்து பொழியும். அதனால் உலகத்துக்கு நல்லூழி அமையும். அறம் பிழையாது. செம்மை மாறாது. இப்படி உலகம் இயங்க உதவும் மற்றொருவர் ஆளும் அரசன் என்கிறது கலித்தொகை.

**"தொன்னல மிழந்தோள்நீ துணையெணப் புணர்ந்தவள்"** ***(நச்சர்.கலி.100:20)***

இழந்தோள் - "ஆ" ஓவாய் நின்றது.

இன்பம் தரும் மார்பினை உடையவனே! நீதான் துணை என்று உன்னைப் புணர்ந்தவள், பண்டைய அழகினை இழந்தவளாகத் துன்புறுவது கொடியது. எத்தகையவராக இருந்தாலும் அவர்களின் துன்பங்கள் எல்லாவற்றையும் போக்கும் பாங்குடைய உனக்கு, இப்படியெல்லாம் நான் எடுத்துச் சொல்ல வேண்டுமா? எனச் சான்றோர் கூறுகிறனர்.

**"நோக்கஞ்சான் பாய்ந்த பொதுவினைச் சாக்குத்தி"** ***(நச்சர்.கலி.101:16)***

"சாவக்குத்தி" யென்பது "சாவீவென்னுஞ் செயவெனெச்சத்திறுதி"வகரங்கெடுத்தலுமுரித்தெ" என்பதனால் வகரங்கெட்டது.

**"வஞ்சினம் வாய்த்தானும் போன்ம்"** ***(நச்சர்.கலி.101:20)***

போலும் - போன்மெனத் திரிந்தது. "னகாரை முன்னர் மகாரங்குறுகும்" என்பதனான் மகரம் கால் மாத்திரையாய் நின்றது.

**"எல்லீற்றுப் போழ்தாயின் ஈதோளிக் கண்டேனால்"** ***(நச்சர்.கலி.117:13)***

இதோளி "ஈதோளி"யெனச் சுட்டு நீண்டு நின்றது. இது சுட்டு முதலைாகிய இரகவீற்று வல்லெழுத்து மிக்கு.

**"காதல் செய் தருளாது துறந்தார்மாட் டேதின்றி"** ***(நச்சர்.கலி.122:3)***

ஏது - வடமொழி திரிந்து விகாரமாய் நின்றது.

**"எல்லுறு தெறுகதிர் மடங்கித்தன் கதிர்மாய"** ***(நச்சர்.கலி.129:3)***

மடக்கி, மடங்கியென விகாரமாயிற்று. தொன்மையான ஊழிக்காலம் தடுமாற்றம் அடைந்து புதிய ஊழிக்காலம் பிறக்கும் போது புதியனவற்றைப் படைப்பவன் முன்னர் தோன்றி அவற்றை அழிப்பவன் போல கதிரவன் தோன்றி, அவனும் மறையும் காலமே மாலைக்காலம் என்றதுகலித்தொகை.

**"அருந்துயர் நீக்குவேன் போன்மற் பொருந்துபு"** ***(நச்சர்.கலி.131:3)***

"போலும்" என்னும் முற்றுச்சொல் ஈற்றுமிசை உகரம் மெய்யொழித்துக் கெட்டு நின்றது.

**"தாங்குதல் வலித்தலின் றாளின்"** ***(நச்சர்.கலி.137:27)***

வலித்தன்று என்பது வலித்ததன்றென்னும் மறைபொருள் தராமை உணர்க.

நறவம் பூ பூத்திருப்பது போன்ற என் மெல்லிய விரல் மலர்களைப் பிடித்து, அவை சிவக்கும்படி தன் கண்ணில் அமுக்கிக்

கொண்டு பெருமூச்சு விட்டான். பறக்காத குருகு ஊதுவது போலப் பெருமூச்சு விட்டான்.

**"சான்றவிர் வாழியோ சான்றவிர் என்றும்"**

**(நச்சர்.கலி.139:1)**

பலராதலின் சான்றீர் சான்றீரென்றான். ஈர் என்று விளியேலாது குறுகி நின்றது. சான்றோர்களே வாழ்க! சான்றோர்களே வாழ்க!! பிறர் துன்பத்தைத் தன் துன்பம் போலக் கருதிப் போக்கும் கடமை உங்களுடையது என்கிறது.

மேற்கண்ட தரவுகளின்படி, கலித்தொகைக்கு உரைகண்ட நச்சினார்க்கினியரின் உரையில் 42 செய்யுள் விகாரங்களின் வருகை முறையினைக் காணமுடிகின்றது. யாப்பு அமைவு மற்றும் செய்யுள் இன்பத்திற்கான செய்யுள் விகாரத்தைப் பயன்படுத்துவது அக்கால இலக்கண மரபாக இருந்து வந்தமையினை அறியமுடிகிறது. செய்யுளில் பயின்று வரும் ஒருவகையான இலக்கணக் கூறான செய்யுள் விகாரத்தை யாப்பு அமைதிக்காகப் பயன்படுத்தினாலும் புலவர்கள் தங்கள் திறமையினைத் தனித்துவமாகக் காட்ட பயன்படுத்திய ஓர் உத்தியாகவும் பார்க்க முடிகிறது. செய்யுள் விகாரத்தைத் தொல்காப்பியர் சொல்லதிகாரத்தில் பதிவு செய்கிறார். பின்னர் வந்த இலக்கணிகளுள் சிலர் இதனைப் பதிவு செய்வதையும் காணலாம். புலவர்கள் தங்கள் பாக்களில் பயன்படுத்திய செய்யுள் விகாரம் என்ற உத்தியை உணர்த்துபவர்களாக உரைகாரர்கள் திகழ்கிறார்கள். உரையாசிரியர்கள் இல்லாவிடில் இவற்றையெல்லாம் அறிய இயலாது. செய்யுள் விகாரம் போன்ற குறிக்கத்தகுந்த இலக்கணக் கூறுகளை நமக்கு அறிமுகம் செய்கின்ற உரையாசிரியர்களின் உரைத்திறன்களை அறிதலும் பதிவு செய்தலும் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் சிறப்பிற்கும் பெரிதும் துணைபுரியும். மற்ற மொழி இலக்கணக் கூறுகளுடன் ஒப்பிட்டு ஆய்வதும் இதன் அடுக்கட்ட வளர்ச்சிக்கு உதவும்.

## நூற் பட்டியல்

1. அரவிந்தன். மு. வை, உரையாசிரியர்கள், 2008, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்
2. இளம்பூரணர் உரை, தொல்காப்பியப் பொருளதிகாரம் மூலமும் உரையும், 2010, சென்னை, சாரதாப் பதிப்பகம்
3. கலித்தொகை மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், 2022, சென்னை, டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்
4. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி 1, 2014, சென்னை, நியூ செஞ்சுரி புத்தக நிலையம்
5. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி 2, 2014, சென்னை, நியூ செஞ்சுரி புத்தக நிலையம்
6. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி 3, 2014, சென்னை, நியூ செஞ்சுரி புத்தக நிலையம்
7. சங்க இலக்கியம், பத்துப்பாட்டு, தொகுதி - 1, 2014, சென்னை, நியூ செஞ்சுரி புத்தக நிலையம்
8. சங்க இலக்கியம், பத்துப்பாட்டு, தொகுதி - 2, 2014, சென்னை, நியூ செஞ்சுரி புத்தக நிலையம்
9. சுப்ரமணியம். ச. வே. சு., சங்க இலக்கியம் முழுவதும், 2006, சென்னை, மணிவாச கர் பதிப்பகம்
10. சிற்பி பாலசுப்பிரமணியன், நீல பத்மநாபன், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, புதுதில்லி, சாகித்திய அகாதெமி
11. தமிழண்ணல், தொல்காப்பியம் எழுத்த திகாரம், தொகுதி - 1, 2006, சென்னை, மணிவாசகர் திப்பகம்
12. தமிழண்ணல், தொல்காப்பியம் சொல்லதிகாரம், தொகுதி - 2, 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்
13. தமிழண்ணல், தொல்காப்பியம் பொருளதிகாரம், தொகுதி - 3, 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்